நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23-ஆம் நாள் சாட்சியாகிய- ஹரிஸ் காந்தி என்பவரின் வாக்குமூலம் 1969- ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. தமிழ்மொழி, இருக்கை எழுத்தர் நிலை -2 அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரிஸ் காந்தி | மதம் | : |
| தந்தை./கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | தொழில் | : |
| தாலூக்கா | : | வயது | : |

---

**23.6.2026**

(துவங்கப்படும் நேரம் - 10.55 AM)

(முடிக்கப்பட்ட நேரம் - 11.00 AM)

**O.S. No.138/2025 (P.W.1)**

முதல் விசாரணை :-

நான் இந்த வழக்கின் 1ம் வாதியாவேன். எனக்காவும் எனது சகோதரிகளுக்காகவும் நான் முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில், 14.12.2021 ம் தேதியிட்ட பத்திர எண்.1069/2021 எண் கொண்ட 2ம் பிரதிவாதி சண்முகவடிவு என்பவருக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய பத்திரத்தின் தரவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ–1** ஆகும். 7.4.2025 ம் தேதியிட்ட சிட்டவின் தரவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ–2** ஆகும். 31.7.2024 ம் தேதியிட்ட 1.1.1975

முதல் 30.7.2024 ம் தேதிவரையிலான வில்லங்க சான்றிதழின் தரவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ–3** ஆகும். 20.8.2024 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ–4** ஆகும். 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பி திருப்பபப்பட்ட அஞ்சல் உறையின் அசல் **வா.சா.ஆ–5** ஆகும். வாதியின் அம்மா பார்வதி லட்சுமணனின் இறப்பு சான்றிதழின் தரவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ–6** ஆகும். ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என பிராத்திக்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.